செங்கோல்
ஆசிரியர்: ம. பொ. சிவஞானம்
மலர் 19] சென்னை, கார்த்திகை 23 (8-12-68) ஞாயிறு விலை 25 காசு [இதழ் 2

இனி நாம் மதராஸிகள் அல்ல;

தமிழ் நாட்டார்–தமிழினத்தார்!

★

மத்திய மாநில அரசுகளுக்கு நன்றி செலுத்துவோமாக!

[1-12-68 ஞாயிறன்று மாலை சென்னை மவுண்ட் ரோடிலுள்ள பாலர் அரங்கில் நடைபெற்ற தமிழ்நாடு பெயர் மாற்ற மகிழ்ச்சி விழாக் கூட்டத்திற்கு தலைமை வகித்து தலைவர் ம. பொ. சி. பேசியது. இங்கே தரப்பட்டுள்ளது.]

இந்த மாபெரும் கூட்டம் மூன்று ரைகோடி தமிழ் மக்களின் சார் பாக கூட்டப்பட்டிருக்கிறது. தமிழக அரசினுடைய மகத்தான வெற் யை—மத்திய அரசு நமக்குத்தந்த பருதவியை—பாராட்டுவதற் காகவே இங்கே நாம் குழுமியிருக்கிறோம்.

இந்தக் கூட்டத்திற்கு என்னைத் தலைமை தாங்கும்படி பணித்தது எனக்குச் செய்த பெருஞ் சிறப்பு என்று நான் கருதுகின்றேன். அது மட்டுமல்ல; இந்தப் பெயர் மாற்றப் பிரச்னையில் பல ஆண்டுகளுக்கு முன்பு தமிழரசு கழகம் போராட்டம் நடத்தியபோது, 'அதிலே ஈடுபட்ட ஒவ்வொரு தொண்டருக்கும் செய்த சிறப்பாக நான் கருதுகிறேன். தமிழரசுக் கழகத்தின் சால் நன்றியறிதலை வெளிப்படுத்திய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய நாள் 'தமிழன்' என்ற உணர்வு படைத்த ஒவ்வொருவரும் பூரிப்படையக்கூடிய நாள்.

தமிழ்ப் பெருமக்களே! நேற்று வரை வடநாட்டார் நம்மை "மதராஸிகள்" என்றார்கள். ஆந்திர நாட்டார் நம்மை "அரவ வாடு" என்றார்கள். கேரளத்தார் நம்மை "பாண்டி" என்றார்கள். இனிமேல் நாம் 'பாண்டி'யல்ல; 'அரவவாடு' அல்ல; 'மதராஸி'யும் அல்ல! தமிழ் நாட்டார்—தமிழ் இனத்தார்! தன் மானமுடைய ஒரு தனி சமுகத்தார்!

நம்முடைய பெரு மதிப்புக்குரிய முதலமைச்சர் அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்று உடல்நலம் பெற்ற பிறகு—முதன் முதலாக இன்றுதான் பேசுகின்றார். அந்த வகையிலே, பயண வெற்றிகண்ட நாள் இந்த நாள் என்று நாம் பெருமகிழ்ச்சியோடு பூரிக்கின்றோம்.

அண்ணாவின் உயிரைக் காப்பதிலே மேற்கு (அமெரிக்கா) நமக்கு கை கொடுத்ததென்றால், தமிழினத்தின் உரிமையைக் காப்பதிலே வடக்கு (மத்திய அரசு) நமக்குக் கை கொடுத்தது. அதனால், மேற்குக்கும் வடக்குக்கும் நன்றி தெரிவிக்க இந்தக் கூட்டத்தை நடத்துகின்றோம்.

இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலோ, வேறு ஒரு கட்சியின் சார்பிலோ நடைபெறும் கூட்டமல்ல. "தமிழ்நாடு மகிழ்ச்சி விழாக் குழு"வின் சார்பில்தான் கூட்டப்பட்டிருக்கிறது. மனமிருப்பவர்களெல்லாம் இதில் கலந்து கொள்ளலாம்.

காங்கிரஸ் பெருந் தலைவர்களும் இதில் கலந்துகொண்டிருந்தால், 'தமிழ்நாடு' பெற்ற பெருமையிலே தங்கள் தங்கள் பாட்டன்மார்களுக்கும் பங்கிருந்ததாக அவரவர்கள் பேரப் பிள்ளைகள் வருங்காலத்தில் சொல்லிக்கொள்ள வாய்ப்பு தேடிக் கொடுத்திருப்பார்கள். ஆனால், என் பேரனுக்கு அந்த பாக்கியம் கிடைத்துவிட்டது.

அண்ணா அவர்கள் பெருந்தன்மையுடன் எழுதிய தீர்மானத்திலே, மத்திய அரசுக்கு நன்றி தெரிவிக்கும் வாசகமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதனால், இந்த விழாவை மத்திய அரசுக்கு நன்றி தெரிவிக்கவும் நாம் கொண்டாடுகிறோம். எத்தனையோ பிரச்னைகளில் மத்திய அரசோடு போராடி வருகிற தமிழக அரசு—எத்தனையோ கருத்துக்களில் மத்திய ஆட்சியை நடத்துகிற காங்கிரசோடு போராடுகிற திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள்—'தமிழ்நாடு' என்று பெயர் கொடுப்பதிலே கஞ்சத்தனம் காட்டாமல், தாமதம் செய்யாமல், மறுப்பு கூறாமல், முணுமுணுத்தல் இல்லாமல் செயல்பட்டதற்காக மத்திய அரசைப் பாராட்டுகிறார்கள். தமிழக அரசின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனநாயகத் தன்மைக்காக மத்திய அரசுக்கு இந்திரா அம்மையாரின் அமைச்சரவைக்கு நன்றி செலுத்துகிறோம்.

கலைஞர் சண்முகம் 'செந்தமிழ் நாடென்ற போதினிலே' என்ற பாரதியார் பாட்டை இங்கு பாடக் கேட்டீர்கள். அது இந்த விழாவுக்காக புனையப்பட்ட பாட்டல்ல; தி. மு. கழகத்துக் கவிஞரொருவர் எழுதிய பாட்டல்ல; 1921ம் ஆண்டோடு வாழ்வைமுடித்துக்கொண்டு விட்ட மகாகவி சுப்பிரமணிய பாரதியார்—காங்கிரஸ் பாசறையிலே தோன்றியவர்—47 ஆண்டுகளுக்கு முன் இயற்றி வைத்ததாகும். "பாருக்குள்ளே நல்ல நாடு,எங்கள் பாரத நாடு" என்று பாடியவர்—இந்தப் பாட்டில் சொல்லுகிறார்—"செந்தமிழ் நாடெனும் போதினிலே, இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே" என்று. அதற்குக் காரணங்களையும் சொல்லுகிறார். "தமிழ்நாடு" என்ற சொல்லைக் கேட்டதும், தம் காதுகளிலே தேன் வந்து பாய்வது ஏன்? அந்தச் செந்தமிழ்-நாட்டைத் தமது தந்தையர் நாடு என்று நினைக்கும்போது தமக்கு ஒரு சக்தி பிறப்பது ஏன்? என்பதற்கு சரித்திர ரீதியான காரணங்களைச் சொல்லுகிறார்.

முத்தமிழ் மாமுனியாம் அகத்தியன் பொதிகை மலையில் அமர்ந்து தமிழ் மொழியை மொய்ம்புறக் காக்கும் நாடு—ஆதலால், இது தமிழ் நாடு!

செல்வம் எத்தனை உண்டு புவி மீது அவை யாவும் படைத்தது—ஆதலால், இது தமிழ்நாடு!

பன்னீராயிரம் கவிதைகளை மழையெனப் பொழிந்த மகாகவி கம்பன் பிறந்தது—ஆதலால், இது தமிழ் நாடு!

வள்ளுவன் குறளை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்டது—ஆதலால், இது தமிழ்நாடு!

காதல் புரியும் அரம்பையர் போல் இளம் கன்னியர் சூழ்ந்தது—அதனால், இது தமிழ்நாடு!

விண்ணை இடிக்கும் இமயத்திலிருந்த மூன்று மன்னர்களைத் தனது செண்டால் அடித்த தோடித் தோள் செம்பிய மன்னன் வாழ்ந்த நாடு—அதனால், இது தமிழ்நாடு! —என்று பாடுகிறார் பாரதியார். அந்த மகாகவி பாரதி இன்று இந்த அரங்கிலே இருந்து நம்மை யெல்லாம் வாழ்த்திக் கொண்டிருக்கிறான் என்று நான் நம்புகின்றேன்.

பலபேர் கேட்கிறார்கள், "தமிழ் நாடு என்று பெயர் வைத்ததால் சோறு வந்துவிடுமா?" என்று. வராதுதான். இது கேள்விகேட்டு தெரிந்துகொள்ளக்கூடிய விஷயமாக இருக்கிறது அவர்களுக்கு. நானும் கேட்கிறேன், அவ்வளவு சாமான்ய விஷயமானால், ஏன் இதை 1956லேயே வைத்திருக்கக் கூடாது? 'தமிழ் நாடு' என்று பெயர் வைப்பதால், சோறும் வராது; சோறும் போகாது. அவ்வளவு சாதாரண விஷயத்தை அப்பொழுதே ஏன் செய்திருக்கக் கூடாது? சாதாரண விஷயத்தைக் கூட செய்ய விரும்பாத ஒரு கூட்டத்தின்மீது நாம் வெற்றிபெற்றிருக்கிறோமாதலால், அதிலே நமக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

நான் நேற்றுவரை நினைத்திருந்தேன். வாதத்திற்கும் வம்புக்கும் குமுறிய பேச்சு ஒன்றுமில்லாமல், மக்களுக்கு நந்தெம்பூட்டக்கூடியதாகவே பேசவேண்டும் என்று. காங்கிரஸ் ஏடுகளை நித்தம் நித்தம் காலையில் விரித்தால், சித்தம் திருத்திய வாசகங்கள்தான் நிறைய இருக்கின்றன.

அவர்களும் இப்பொழுது நம்மைப் பின்பற்றுகிறார்கள்; நமக்கு முன்னாலேயே மகிழ்ச்சிநாள் கொண்டாடியிருக்கிறார்கள். நல்லதுதான். ஆனால், நாடெங்கும் நடத்தவில்லையே! நகரத்தில் நடத்துவதோடு ஏன் முடித்துக்கொண்டாய்? இன்று நாங்கள், இதே நேரத்தில் குமரி முனைமுதல் குமரன் கோயில்வரை தமிழ்நாடு முழுவதும் பட்டிதொட்டிகளிலெல்லாம் விழா நடத்திக் கொண்டிருக்கிறோம். "தமிழ் நாடு வாழ்க" என்று குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறோம். அது தன்மானமுள்ள தமிழனின் குரல்!

தி. மு. க. ஆட்சி வந்திலையானால், 'தமிழ்நாடு' பெயர் மாற்றம் இல்லை!

தி. மு. க. ஆட்சி இந்த மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிட்டபிறகு, அதனையாரெல்லாம் பின்பற்றுகிறார்கள் தெரியுமா? காங்கிரஸ் பெருந் தலைவர், நிஜலிங்கப்பாசொல்லுகிறார் 'மைசூர்' மாநிலத்திற்கும் "கன்னடம்" என்று பெயர் வைக்க வேண்டும்' என்று. நீ அவரு

(8-ஆம் பக்கம் பார்க்க)

செங்கோல்
ஆசிரியர்: ம.பொ.சிவஞானம்
8-12-68 ★ ஞாயிறு

நல்ல காலம் பிறக்கிறது!

மத்தியில் குவிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களில் பலவற்றை மாநிலங்களுக்கு மாற்றித் தரவேண்டும் என்பது தமிழரசுக் கழகத்தின் கொள்கை. உண்மையில் இந்தக் கொள்கைக்கு வெற்றி தேடுவதற்காகவே நம் கழகம் அரசியல் துறையோடு தொடர்பு கொண்டு இயங்கி வருகின்றது. தமிழகம் சுயாட்சி பெற்றுவிட்டால், நம் கழகம் அரசியல் கலப்பற்ற, முற்றிலும் கலாச்சாரத் தன்மையுடைய இயக்கமாகிவிடும். இருபத்து மூன்றாண்டு காலமாக தமிழரசுக் கழகம் வற்புறுத்திவரும் சுயாட்சிக்கொள்கைக்கு இப்போது நாம் எதிர்பார்க்க முடியாத இடங்களில் இருந்தெல்லாம் ஆதரவு கிடைத்துவரக் காண்கிறோம். சில மாநிலங்களிலேனும் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றினால்தான் மாநில சுயாட்சிபற்றி மத்திய அரசு சிந்திக்கும் என்று நம் கழகம் நம்பியது. இந்த நம்பிக்கையின்பேரிலேயே தமிழகத்தில் காங்கிரசை அதிகார பீடத்திலிருந்து வெளியேற்றும் பணியில் தோழமைக் கட்சிகளுடன் கூட்டுசேர்ந்து பங்கு பெற்றோம். நாம் நினைத்தது நிறைவேறிவிட்டது. சில மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத கட்சிகள் ஆட்சிபுரியும் நிலை தோன்றிவிட்டதால், மாநில சுயாட்சி பற்றிய சிந்தனை எட்டுத் திசைகளிலும் பிறந்து விட்டது.

மத்திய அரசு நிர்வாக சீர்திருத்தக் குழுத் தலைவர் திரு. அனுமந்தையா, தமது குழு, மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென சிபார்சு செய்யும் என சூசகமாகக் கூறியிருக்கிறார். சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன், அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்பட்டுள்ள நிலை இனியும் நீடிக்குமானால் தேசிய ஒருமைப்பாடு குலையும் என எச்சரித்திருக்கிறார்.

இந்திய சுப்ரீம் உயர்நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி திரு. சுப்பா ராவ், "மத்திய அரசு எசமான தோரணையில் மாகாணங்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறது. இது, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கே பொருந்தாததாகும்" என்று மனக் கசப்போடு கூறியிருக்கிறார்.

இம்மாதம் 3-ந் தேதி நடைபெற்ற இந்தியப் பாராளுமன்றக் கூட்டத்திலே,

> "மத்திய—மாநில அரசுகளிடையே நல்லுறவு நிலவ அரசியல் அமைப்புச் சட்டத்திலே மாறுதல் தோற்றுவிப்பதுபற்றி ஆராய வேண்டும். அதற்கென உயர்தரக் கமிஷன் ஒன்றும் நியமிக்கப்பட வேண்டும்."

என்பதாக, ஜனசங்க உறுப்பினர் திரு. கன்வர்லால் குப்தா கூறியிருக்கிறார்.

இதற்கெல்லாம் மேலாக சுதந்திராக் கட்சியின் அமைப்புத் தலைவர் அறிஞர் ராஜாஜி அவர்கள்,

> "அரசியல் சட்டரீதியாக மாநில அரசுகளின் பொறுப்பிலுள்ள துறைகளுக்கு டில்லியில் மத்திய அமைச்சுத் துறைகள் தேவையில்லை.
>
> "அப்படி, அமைச்சுத் துறைகள் இருந்தாலும் அவற்றுக்கு வேலையில்லை. வேலையில்லாமல் இருக்கும் இடத்தில் நல்லவை ஏற்படமுடியாது. அவை தீயவற்றின் இருப்பிடமாகிவிடும்.
>
> "எனவே, வேளாண்மை, சுகாதாரம், கல்வி அமை சுத்துறைகள் மத்தியில் கலைக்கப்பட்டு விடவேண்டும்."

—என்பதாக, 'சுயராஜ்யா' ஆங்கில வார இதழில் எழுதியிரு கிறார்.

ஆந்திர மாநில அரசும் இதைப்போன்ற கருத்தை மத்தி அரசின் கவனத்திற்கு அனுப்பியிருக்கிறது. அதற்கு ஆதரவளி கும் முறையிலேயே தமது கருத்தை வெளியிட்டுள்ளார் ராஜாஜி

ராஜாஜி கருத்து நமக்குப் புதிதன்று. நாம் ஒரு தலைமுறை காலமாக வற்புறுத்தி வருவதுதான். ஆயினும், இந்தி அரசியலில் பீஷ்மர்போல விளங்கும் அவர் நமது கருத்துக்கு ஆதரவாக எழுதியிருப்பது வெற்றி பெறுவதற்கான கால நெருங்கிவிட்டது என்ற நம்பிக்கையை நமக்குத் தருகின்ற ஆனால், ஒரு அடிப்படை வேற்றுமையை இங்கு நாம் எடுத்து காட்டுவது அவசியமாகிறது. தமிழ் மொழி பேசுகின்ற தமிழ் நாட்டில் வாழ்கின்ற மக்களெலாம் தனித்த வரலாறு தனித்த பண்பாடும் தனித்த கலாச்சாரமுமுடைய ஒரு த தேசிய இனத்தினர் என்ற அடிப்படையில் தமிழரசுக் கழ தமிழகத்திற்கு சுயாட்சி கோருகின்றது. இதே அடிப்படையி ஆந்திர—கேரள—மகாராஷ்டிர—கூர்ஜர—வங்க தேசி இனங்களின் தாயகங்களுக்கும் சுயாட்சி வழங்க வேண்டுமெ கொள்கையை நம் கழகம் வற்புறுத்தி வருகின்றது.

மத்திய அரசானது மொழிவாரி மாநிலங்கள் தாமே விரு பிக் கலந்த சமஷ்டியாக இயங்க வேண்டுமென்பதும் கொள்கை. மாநிலந்தோறும் கவர்னர் நியமனம் தேவையில் தேவைப்படுமானால், மாநில கவர்னர், அந்த மாநிலத்தவராக இருக்க வேண்டும். இந்த அடிப்படைகளின் பேரில்தான் மொ வாரி தேசிய இனங்களின் தாயகங்களுக்கு சுயாட்சி கே கிறது தமிழரசுக் கழகம்.

திருவாளர்கள் அனுமந்தையா, சுப்பா ராவ், ஜெ பிரகாசர், ராஜாஜி ஆகியோர் நம் கழகத்தின் கண்ணோட்டப்ப தான் மாநிலங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் கோருகி னர் என்று நாம் நம்புவதற்கில்லை. ஆம்; அவர்கள் அத்த பெருமே இதனை தேசிய இனப் பிரச்னையாகக் கருதவில் இதற்கு மாறாக, மத்திய—மாநில அரசுகள் சம்பந்தப்ப நிர்வாகப் பிரச்னையாகவே கருதுகின்றனர். அவர்கள் என் கருதினாலும் சரி; மத்தியில் உள்ள அதிகாரங்களில் சில பலவோ மாநிலங்களுக்கு உடனடியாக மாற்றித் தரப்படுமா அதனை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்போம். நாம் காண வி பும் புதிய தமிழகம் மலர இத்தகைய மாறுதல் தேவைப் கின்றது. ராஜாஜி போன்றவர்கள், தத்தம் கருத்தை வெளி வதோடு நின்றுவிடாமல், அதனை நிறைவேற்றுவதற்கான பந்தத்தையும் மத்திய அரசுக்கு ஏற்படுத்தவேண்டும். அதற் கூட்டு முயற்சியும் தேவை. இந்த விஷயத்தில் சென்னை 'ஆப பரி'யில் தமிழரசுக் கழக சார்பில் நடைபெற்ற மாநில சுயா மாநாடு மிகவும் சிறந்த முறையில் வழிகாட்டியிருக்கிறது. அ எதிரொலியாகத்தான் ராஜாஜி, ஜெயப்பிரகாசர் போன்ற பெ தலைவர்கள் தத்தம் கருத்தை வெளியிட முன்வந்தனர் நம்புகிறோம்.

பிறர் கையை நம்பிக்கொண்டிராமல், 'தன் கையே த உதவி' என்னும் பழமொழிப்படி ஆபட்ஸ்பரி மாநாட்டின் முடி யொட்டி, சுயாட்சிக் கோரிக்கைக்காக தமிழரசுக் கழகம் போராட்டத்தைத் துவக்கியாக வேண்டும். அப்பொழுது சுயாட்சிப் பிரச்னையிலே நாம் இறுதி வெற்றியைக் காண யும். அந்த நாளும் விரைவரும்.

சிதம்பரம் (தெ. ஆ.)

சிதம்பரம் தமிழரசுக் கழக உறுப்பினர் கூட்டம் 1-12-68ல் திரு. ஆ. கோவிந்தராசன் தலைமையில் பயணிகள் விடுதியில் நடைபெற்றபோது கீழ்க்கண்டவர்கள் த. அ. க. கிளையின் புதிய நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். விவரம் வருமாறு:

தலைவர் :—ம. ச. நடராசன்
துணைத்தலைவர்:-ஆ.கோவிந்தரா
செயலாளர்: கணேசன்
துணைச்செயலர்:—க. பாலகுரு
பொருளாளர்: இரா. துரைரா
உறுப்பினர்கள்: வை. கண்ண, தீட்சதர், க. ராவன், த.செபரா, ப.ஆறுமுகம், மு. ஜெக்கரியா.

ம.பொ.சி. நடந்த பாதையிலே, சோதனைகளும் வேதனைகளும்!

('தமிழ்ப் பித்தன்,' அம்மாப்பேட்டை)

நம் தலைவர் ம.பொ. சி.யும், அவர் வளர்த்த தமிழரசுக் கழகமும் இந்த இடைப்பட்ட நீண்டகாலத்தில் எத்தனை இன்னல்களை ஏற்று வெற்றி கண்டுள்ளனர் என்பதை ஒரு கணம் என் நெஞ்சிலே வைத்து நினைத்துப் பார்க்கிறேன்.

ஆண்டு 1948 என்று நினைக்கிறேன்; கோவையிலே 44-வது மாகாண காங்கிரஸ் மாநாடு நடந்தது. அந்த மாநாட்டின் தலைமைப் பதவிக்கு நம் தலைவர் திரு. ம. பொ. சி. அவர்களும், திரு. காமராசர் அவர்களும் போட்டியிட்டு இறுதியில் திரு. காமராசர் வெற்றி பெற்றார். அப்போது நாடு விடுதலை பெற்றதால் காங்கிரசின் கொள்கைகளில் ஒன்றாக இருந்த "இந்தியா வெள்ளையராட்சியிலிருந்து பூரண சுயராஜ்யம் அடையவேண்டும்" என்ற வாசகமானது, "விடுதலை பெற்றுள்ள இந்தியாவை சோஷலிச லட்சியம் உள்ளதாகச் செய்ய வேண்டும்" என்ற கருத்தையுடைய தீர்மானமாக மாறியது.

அந்த சோஷலிசத் தீர்மானத்தை அப்போது முன்மொழிந்தவர்பெரிய பணக்காரர்; வழி மொழிந்தவர் பெரிய நிலப்பிரபு. தீர்மானத்தின் மீது பேசிய திரு. ம. பொ. சி.அவர்கள்,

> "இந்தத் தீர்மானத்தை ஒரு ஏழை மகன் முன்மொழிந்து, மற்றொருவர் வழி மொழிந்திருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும். பிள்ளையார் பிடிக்கத்தான் முயல்கிறோம். ஆனால், பிடிப்பவர்களைச் சிறிது உற்று நோக்கினால், அவர்கள் பிடிப்பது பிள்ளையாரை அல்ல; வேறு எதையோ பிடிப்பார்கள் போலிருக்கிறது."

என்று துணிவாகக் கூறினார். அப்போதே திரு. காமராசர் முகத்தில் கடுகு வெடிக்கத் தலைப்பட்டது.

மாநாட்டின் இறுதித் தீர்மானம் "விடுதலை பெற்ற இந்தியாவில் உள்ள மாகாணங்களை மொழிவாரி திருத்தி அமைக்கவேண்டும்" என்பது. அதற்கு ஒரு திருத்தம் கொடுத்தார் நம் ம.பொ. சி.

அதாவது, "அப்படிப் பிரிக்கப்படும் மாகாணங்களில் குமரிமுதல் வேங்கடம் உள்ளிட்ட தமிழ் மாநிலத்தில் சுதந்திர சோஷலிசத் தமிழ்க் குடியரசு நிலவவேண்டும்" என்பது திருத்தம்.

மாநாட்டுத் தலைவர் திரு. காமராசருக்கு அதற்குமேல் பொறுமையில்லை. ம. பொ. சி.யின் திருத்தத்தை உடனே நிராகரித்தார். ம. பொ. சி. தமது திருத்தம் நிராகரிக்கப்பட்டதற்குத் தலைவரிடம் விளக்கம் கேட்டார். விளக்கம் தராது "நானே தலைவர்; தலைவர் நிராகரித்தது நிராகரித்ததுதான்" என்று அவருக்கே உரிய ஆணவத்தோடு பதில் கூறினார். மாநாட்டில் இரண்டுமணிநேரம் நீண்ட சலசலப்பு. மாநாட்டுப் பந்தலே ஒரு போர்க்களம் போலக் காட்சியளித்தது. முடிவில் கட்சிக் கட்டுப்பாடு என்ற முட்டுக்கட்டையைக் காட்டி திருத்தத்தைத் திரும்பப் பெறுமாறு ம. பொ. சி.யை வற்புறுத்தினர். உடனே ம. பொ. சி. அவர்கள் 'நான் திருத்தத்தைத் திரும்பப் பெறப் போவதும் இல்லை; இனி அதை வற்புறுத்தவும் போவதில்லை. இதற்கு விளக்கம் நாளை மாலை சிதம்பரம் பூங்கா கூட்டத்தில் கூறுகிறேன்" என்று சொல்லி அமர்ந்தார்கள்.

அப்போதுதான் ம. பொ. சி. என்ற திரு உருவத்தை முதன் முதலில் கண்டேன்; அவரது முழக்கத்தையும் அந்த மாநாட்டில்தான் முதன் முதலாகக் கேட்டேன். அன்று அவர்பால் எனக்கு ஏற்பட்ட ஈடுபாடுதான் இத்தனை காலமாக இடையறாது நின்று நிலைபெற்று வருகிறது.

மறுநாள் சிதம்பரம் பூங்காவிலே நடைபெற்ற கூட்டத்திற்கு கவிஞர் கு. சா. கி. அவர்கள் தலைமைவகித்தார். அந்தக் கூட்டத்திற்கு அடியேன்தான் இறைவணக்கம் பாடினேன்.

அன்றைய கூட்டத்திலே தலைவர் ம.பொ.சி பேசவில்லை; தமிழரின் குரல் பேசிற்று! செந்தமிழ்நாடு சிறுமையெல்லாம் நீங்கி, உரிமை பெற்று, பெருமை படையவேண்டும் என்றால், அது சிவஞானம் என்ற நல்லவரால்தான் முடியும் என்று என்னுடைய சிற்றறிவு அன்றே முடிவு கட்டியது. இது நிற்க.

ஆண்டு 1952! சென்னை பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அறுதியான பெரும்பான்மை பலம் கிடைக்காமல் போய் அவதிப்பட்ட நேரம். காங்கிரசை ஆழத் தோண்டிப் புதைக்க பெரியார் ஈ. வே. ரா. வின் ஆதரவால் ஐக்கிய முன்னணி அமைந்தநேரம். கதர் கட்டிய காங்கிரஸ்காரன் தெருவில் நடக்க அஞ்சிய நேரம். பூணூலும், நாமமும் தரித்து, குடுமியுடன் வீதியில் யாரும் செல்ல முடியாதநேரம். காங்கிரஸ்காரர்களுக்கு 'ஆறு அவுன்ஸ்' என்ற அடைமொழி அளிக்கப்பட்ட நேரம். அந்த நேரத்தில் திரு. ம. பொ. சி.யின் முயற்சியால் தமிழரசுக் கழகம் "திராவிட இயக்க எதிர்ப்புமாநாடு" போட்டு தீய சக்திகளை ஒழிக்கப் பெரும் பணி புரிந்தது. ஆம். திரு. ம. பொ. சி.யின் தமிழரசுக் கழகப் பாதுகாப்புடன் காங்கிரஸ் தோழர்கள் கட்டிய கதரோடு பயமில்லாமல் நடமாட முடிந்தது. இந்த உதவிக்கு தமிழ்நாடு காங்கிரஸ் தந்த கைம்மாறு என்ன தெரியுமா? "கழகத்தைக் கலைக்கிறாயா? அல்லது காங்கிரசைவிட்டு வெளியேறுகிறாயா?" என்ற கேள்விதான். முடிவு என்ன? கழகம் காங்கிரசை விட்டு வெளியேறவில்லை. அதற்கு எதிர்மாறாக காங்கிரஸ் கழகத்தை இழந்தது. ஆம். அதுதான் உண்மை.

இந்த உண்மையை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும் என்றால், 1953ஆம் ஆண்டு 'சுதேசமித்திரன்',—'தினமணி' தாள்களை எடுத்துப் பாருங்கள். அவைகளில் தினந்தோறும் கடிதக் குவியல்கள் பக்கத்துக்குப் பக்கம் காட்சி தரும்.

"காங்கிரஸைவிட்டு கழகத்தை வெளியேற்றாதே! கழகத்தின் சேவை காங்கிரசுக்குத் தேவை. தமிழ்நாடு காங்கிரசே; கழகத்தை விலக்காதே!" இதுபோன்ற ஆயிரம் ஆயிரம் அன்பர்களின் வேண்டுகோள்கள். ஆனால், அன்றைய தமிழ்நாடுகாங்கிரஸ் இந்த வேண்டுகோள்களை மதித்ததா? இல்லை. "கேடுவரும் பின்னே; மதிகெட்டு வரும் முன்னே!" என்ற பழமொழிக்குத் தன்னை முதல் எடுத்துக்காட்டாக ஆக்கிக்கொண்டது. ஆம்; காங்கிரஸின் மதி கெட்டது அப்போது; கேடுவந்தது 1967ல்!

இறுதியாக, ராஜாஜியின் புதுக் கல்வித் திட்டம். அந்தத் திட்டத்திற்கு விளக்கவுரை தரும் 'பரிமேலழகர்' ஆனார் திரு. ம. பொ. சி. ராஜாஜியுடன் தமிழகம் எங்கணும் ம. பொ. சி.யும் பயணம் செய்து கல்வித் திட்டத்தின் நோக்கத்தையும், பயனையும், உயர்வையும் விளக்கிக் கூறினார்.

திட்டத்தை ஆதரித்து, சூறாவளிப் பயணம் செய்து, பிரச்சாரம்செய்த ம. பொ. சி.க்குக் கிடைத்த பரிசு என்ன தெரியுமா? மாயவரத்தில் ம. பொ. சி. மண்டை உடைக்கப் பட்டதாகும். அது சம்பந்தமான வழக்கு சிலகாலம் நடந்தது. அப்போது ம. பொ. சி என்ன கூறினார் தெரியுமா? 'அடித்தவன் மீது எனக்கு எவ்வித காழ்ப்பும் இல்லை: பழி வாங்கும் உணர்ச்சியும் இல்லை' என்று கூறினார். ஆம் "இன்னா செய்தாரை நன்னயம் செய்து ஒறுத்த" நல்ல தலைவர் நமது ம. பொ. சி.

அதனால்தான் பேராசிரியர்'கல்கி' அவர்கள் தமது பத்திரிகையிலே ம. பொ. சி.க்கென துணைத் தலையங்கம் ஒன்று தந்து, அவரது திருவுருவத்தை 'கல்கி'யில் வெளியிட்டு, "ம. பொ. சி.க்கு வயது நூறு!" என்று தலைப்பும் கொடுத்து எழுதினார். மீண்டும் ம. பொ. சி. மாயவரத்திற்கு வருகை தந்தபோது அவ்வூர் அன்னாருக்கு வீர வேற்பு தந்து மகிழ்ந்தது.

ராஜாஜியின் கல்வித் திட்டத்திற்கு இவ்வளவுதூரம் பரிந்து கட்டிக்கொண்டு ஆதரவாய் பிரச்சாரம் செய்த ம. பொ. சி., அதே ராஜாஜி சென்னை மாநில முதல்வராக இருந்தபோதே திருத்தணிப் போராட்டம் நடத்தி, புளியமிலாறு தமிழரசுக் கழகத் தோழர்களை முத்தமிட்டபோது—சிறைபுகுந்தார்.

இந்தத் தலைவரும், அவர் கட்டிக் காத்து வளர்த்துவரும் தமிழரசுக் கழகமும் தமிழகத்திற்கு, தமிழ் மக்களுக்கு, தமிழ் மொழிக்கு ஆற்றியுள்ள பணிகள் தமிழ் நாட்டின் வரலாற்றில் தனியிடம் பெற்றதாகும். இப்படிப்பட்ட தலைவரைப் பற்றியும், கழகத்தைப் பற்றியும் தப்புக் கணக்குப் போட்டு தலை கவிழ்ந்தவர் பலருண்டு. "எதிர்கால அரசியலில் ம. பொ. சி.க்கு இடமில்லை; அவர் அரசியல் வாதியாக இருப்பதைவிட சமயத்துறையில் ஈடுபடுவது நல்லது" என்று வாரத்திற்கு ஒரு 'போஸ்' கொடுத்து, வருடத்துக்கு ஒரு கொள்கை கண்டுபிடிக்கும் "கைரேகை வாணன்" கை எழுத, அதைப் பார்த்து நம் தலைவர் "ஓ! கல்கண்டு தானே! அது மழலை மொழி பேசுகிறது; வருந்தாதீர்" எனக் கூறியிருக்கிறார்.

1967ல் பொதுத்தேர்தல் முடிந்ததும் கழகத்தின் கதியையும், தலைவரின் கதியையும் ஆருடம் கணித்து 'சக்தி'யில் "கோப்பையார்" என்ன எழுதினார் தெரியுமா?

> "தோழர்களே! குறித்து வைத்துக் கொள்ளுங்கள். அப்போதைக்கு இப்போதே சொல்லி வைத்தேன். தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சி. இன்னும் ஒரு வாரத்தில் தி. மு. க.வில் சேர்ந்துவிடுவார்."

எப்படி? நல்ல நகைச்சுவையாக இருக்கிறதல்லவா? என்ன செய்வது? இன்றைய தமிழக காங்கிரஸின் நல்ல நகைச்சுவை நடிகராக நடிக்க, "கோப்பையார்" தவிர வேறு யார் தகுதியானவர்?

தி. மு. க ஆட்சிப் பொறுப்பை ஏற்றதுமே ம. பொ. சி.க்கு மந்திரிப் பதவி தருவது பற்றி பலவிதமான சர்ச்சைகள் எழுந்துகொண்டிருந்தன. 'அவர் அமைச்சர் பதவிக்காக ஆசைப்பட்டு கட்சியைக் கலைத்து விட்டு, அல்லது கட்சியோடு தி.மு. க.வில் சேர்ந்துவிடுவார்' என்று 'அரைகுறை அரசியல்கா'ரர்கள்' ஆருடம் கூறினர். இது சம்பந்தமாகத் தமிழரசுக் கழகத்திற்குள்ளேயே சிறிது சலசலப்பு இருந்தது. அந்த சலசலப்புக்காரர்களை தேர்தலுக்குப்பின்கூடிய சேலம் பொதுக்குழு ஓரளவு அடையாளம் காட்டியது.

"ம. பொ. சி. கழகக் கொள்கைகளை தி. மு. க.விடம் அடகுவைத்துவிட்டார்; தி. மு க.விற்கு வால்பிடிக்கிறார்; தி. மு. க.வுக்குத் துதி பாடுகிறார்.' என்றெல்லாம் புரட்டுகளைக் கிளப்பி விட்டனர். இவை அத்தனையும் ம. பொ. சி. கண்டு மனதிற்குள் நகைத்துக்கொண்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)

தொடர் கட்டுரை

விடுதலைப் போரில் தமிழ் வளர்ந்த வரலாறு

ம.பொ.சி.

(34)

காந்தி சகாப்தம்-9

தமிழ் உரைநடையிலே மறுமலர்ச்சி கண்டவர்கள் கிறித்துவ மிஷனரிகளும், விடுதலைப் பாசறையினரான தேசியவாதிகளுமே யாவர். முன்னவர், ஐரோப்பியர்கள்; பின்னவர், நம்மவர்கள். இவர்களில் தமிழ் உரைநடையில் மறுமலர்ச்சி காணும் முதல் முயற்சியை மேற்கொண்ட பெருமை கிறித்துவப் பாதிரிகளையே சாரும். தேசிய எழுச்சி கொஞ்சம் காலம் தாழ்த்தே தோன்றியதால், தமிழ் உரைநடையிலே மறுமலர்ச்சி காணும் பேற்றினைப் பெறுவதிலே நம்மவர்கள் பின்தங்கி விட்டனர்.

இராமலிங்க சுவாமிகள், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், மாயூரம் வேதநாயகனார் ஆகிய சான்றோர்கள் தமிழில் தனி உரைநடை நூல்களை இயற்றினர். இன்றைய உரைநடைக்கு அம்மூவருமே வழிகாட்டிகள் என்கின்றனர் மொழி வரலாற்று ஆசிரியர்கள். ஆயினும், அவர்கள் இத்துறையில் தனித்தனி நபர்களாக நின்றே பணியாற்றினர். மற்றும், அவர்கள் இயற்றிய உரை நடை நூல்கள் தமிழில் ஓரளவு புலமையுடையவர்களே படித்துப் பயன்பெறத் தக்கவையாகும். ஆனால், கிறித்துவப் பாதிரிமார்கள் தாங்கள் மேற்கொண்ட சமயப் பிரச்சாரப் பணியின் பொருட்டு, சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள சாதாரண மக்களோடு தொடர்பு கொண்டு, அவர்களும் புரிந்துகொள்ளத்தக்க எளிய நடையிலே பிரசுரங்களையும், நூற்களையும் எழுதி வெளியிட்டனர். அவர்கள், சாதாரண மக்களுக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கும் நடுவேயிருந்த விசாலமான இடைவெளியைப் பெருமளவுக்குக் குறைத்து,தமிழ் எழுத்தாளர்களுக்கும் ஒடுக்கப்பட்டு உரிமையிழந்து கிடக்கும் எளிய மக்களுக்குமிடையில் தொடர்பை ஏற்படுத்தினர். இந்த மகத்தான மாறுதலைச் செய்த கிறித்துவப் பாதிரிமார்கள் தமிழ் மொழியின் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுவிட்டனர்.

கிறித்துவப் பாதிரிமார்களும், வள்ளலார்—ஆறுமுக நாவலர் போன்ற சான்றோர்களும் இயற்றிய உரைநடை நூல்கள் பெரும்பாலும் சமயச் சார்புடையவை. சமயங்கடந்து சமுதாய முன்னேற்றத்திற்குப் பயன்படும் பொது அறிவு நூல்களை அவர்கள் படைக்கவில்லை. அடிமைத்தனத்திலிருந்து மக்களை விடுவிக்கும் அரசியல் புரட்சி இலக்கியங்களே அக்காலில் மக்களின் அவசியத் தேவைகளாக இருந்தன. வெள்ளையர்களான கிறித்துவப்பாதிரிமார்களோ அரசியலுக்கு முற்றிலும் விலக்காக வாழ்ந்த வள்ளலார், நாவலர் போன்ற சான்றோர்களோ அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாதவர்களாயினர். அதனால், மக்களுடைய பொது அறிவை வளர்க்கவும், அரசியல் உரிமை உணர்ச்சியை அவர்களுக்கு ஊட்டவும் தேவைப்பட்ட புரட்சி நூல்களை முதன் முதலாக தமிழ் உரைநடையிலே வழங்கிய பெருமை தேசியவாதிகளுக்கே உரிமையாகிவிட்டது. இதிலே யாருக்கும் கருத்து வேற்றுமையிருக்க முடியாது. அத்தகைய தேசிய இலக்கியங்களைப் படைத்த எழுத்தாளர்களுக்கு அன்னிய ஆட்சி கொடுத்த தொல்லை கொஞ்சமன்று. அபராதம், சிறைவாசம், நாடு கடத்தல், இன்னும் திரைமறைவில் எண்ணற்ற இன்னல்கள் ஆகியவற்றை எல்லாம் அவர்கள் பரிசாகப் பெற்றனர். அக்காலைய தேசிய எழுத்தாளர்கள்,முன்னறிவிப்பு தரும் துண்டுப் பிரசுரங்கள், விஷய ஞானத்தை வளர்க்கும்—சில பக்கங்களே கொண்ட—சிறு பிரசுரங்கள், செய்தி இதழ்கள், வாரந்தோறும் மாதந்தோறும் வெளியிடத்தக்க கருத்திதழ்கள், சிறப்பு மலர்கள் ஆகியவற்றை வெளியிட்டு தமிழ் உரைநடையை வளப்படுத்தினர். இந்த அரும்பணியிலே ஈடுபட்ட தேசியவாதிகள்—தமிழ் நாட்டளவில் பார்த்தாலும்—ஆயிரக்கணக்கானவர்கள் என்று கூறலாம்.

தமிழ் உரைநடையிலே மறுமலர்ச்சி காணும் திறனும் துணிவும் அக்காலைய தேசிய வாதிகளுக்கு இருந்திலையானால், சாதாரணப் பொது மக்களோடு நெருங்கி தொடர்புகொள்ளவோ, அவர்களை எல்லாம் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்தும் குறிக்கோளி வெற்றி காணவோ அவர்களா முடிந்திருக்காது.

சுதந்திரம், சமத்துவம்,சகோதரத்துவம், ஜனநாயகம் ஆகிய உயர் கொள்கைகளை மக்களிடையே ப பும் பணியை தேசியவாதிகள் மே கொண்டனராதலால், அந்தப் பணி கு வெற்றி தேடும் பிரச்சார கருவியாக தமிழ் உரைநடையை பயன்படுத்தினராதலால் புதி புதிய சொற்களையும் சொற்றொடர்களையும் படைத்து தமிழ் மொழியை வளர்த்தனர்.

மகாகவி பாரதியார் "சுதந்திரம்" என்பதனை "விடுதலை" என்றும், "கம்யூனிசம்" என்பதனைப் "பொது உடைமை" என்றும் தமிழில் கூ னார். பாரதியார் புதிதாகத் தந்த இந்த 'விடுதலை' 'பொதுஉடைமை' என்ற சொற்கள் தமிழக அரசியல் வட்டாரத்திலே இன்று மிகுந்த செல்வாக்குப் பெற்றுவிட்டன.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் "பார்லிமெண்ட்" என் ஆங்கிலச் சொல்லை "பாராளுமன்றம்" என்றும், "மகாத்மா" என்பதனை "அடிகள்" என்றும் தமிழ்ப்படுத்தினர். இப்படி பாரதியார், வ. உ. சிதம்பரனார், வ. வே. சு. ஐயர், திரு வி. க., சுப்பிரமணிய சிவா, 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி ஆகிய தேசியவாதிகள் ஏராளமான பிற மொழி சொற்களைத் தமிழ்ப்படுத்தினர்.

பத்திரிகை உலகத்தை எடுத்துக்கொண்டால், கருத்தோட்டத்தையும் கவர்ச்சியையும் தரக்கூடிய எத்தனை எத்தனையோ புதிய சொற்களைப் படைத்துத் தந்த பெருமை அதற்கு உண்டு. இது, தனி ஆராய்ச்சிக்குரியதாகும். தேசிய எழுச்சி நாட்டில் ஏற்பட்டு, அதனைப் பின்னணியாகக்கொண்டு, தேசியவாதிகள் உரைநடையில்—ஏன், கவிதை நடையில் கூட எளிய மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் மறுமலர்ச்சி கண்டிலையானால், இந்தியாவிலுள்ள பிரதேச மொழிகள் அனைத்துமே வளர்ச்சியற்றுப் போயிருக்கும். ஆங்கில ஆதிக்கம் இப்போதிருப்பதினும் இன்னும் அதிகக் கொடுமை மிக்கதாக இருந்திருக்கும். அந்த விபத்திலிருந்து பிரதேச மொழிகளைக் காத்து, வளர்த்து, அவற்றிற்கும் பு வாழ்வளித்த பெருமை இந்திய தேசியவாதிகளுக்கே உரியதாகும். ஆனால் இந்த உண்மை காலந்தோறும் தமிழ் வளர்ந்து வந்த வரலாற்றைக் கூறும் நூல்களிலே எந்த ஒன்றிலும் சிறப்பாகக் குறிப்பிடப்படவில்லை.

காலந்தோறும் தமிழ் வளர்ந்த வரலாற்றை விமர்சிப்போர் பெரும்பாலும் புலவர் பெருமக்களாகவே இருக்கின்றனர். இவர்கள் பார்வையிலே தேசியவாதிகள் படைத்த மறுமலர்ச்சி உரைநடை தூய தமிழாகக் காட்சி தரவில்லை. அதனால், இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியிலே தேசியவாதிகள் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணி பெரும் புலவர்களின் கருத்தைக் கவரவில்லை. அந்த மறுமலர்ச்சியை தமிழுக்கு ஏற்பட்ட ஒரு விபத்தாகக் கருதும் மொழி வைதிகர்களும் இருக்கின்றனர். எளியநடையிலே பாரதி பாடிய தேசியப் பாடல்களைக் குறை கூறியும் கேலி செய்யும் கண்டனக் குரல் எழுப்பினர் புலவர்களிலே சிலர். தேசியவாதிகளால் தோற்றுவிக்கப்பட்ட மறுமலர்ச்சி நடை மக்களின் முன்னேற்றத்திற்கும் அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கும் எந்த அளவு பயன்பட்டிருக்கிறது என்பதனைக் கருத்திற் கொள்ளாமல், எந்த அளவு தமிழின் தூய்மையைக் காக்கத் தவறிவிட்டனர் என்பதையே நினைவில் கொள்கின்றனர்.

'தூய தமிழ்' என்பது வேறு;'தனித் தமிழ்' என்பது வேறு. முன்னது சந்தி பிரிக்காமல், பழகு தமிழோடு உறவு கொள்ளாமல், வழக்கற்றுவிட்ட சங்ககால இலக்கிய ஏடுகளிலே சிறைப்பட்டுள்ள சொற்களைக் கொண்டுமட்டுமே எழுதுவதாகும். பின்னது, பிறமொழிச் சொற்களைக் கலவாமல், தமிழுக்கே உரிய சொற்களைமட்டுமே கொண்டு எழுதுவதாகும்.

விடுதலைப்போராட்ட காலத்தில் வாழ்ந்த தேசியவாதிகள் மொழித் துறையிலே இந்த வைதிகங்களை அதிக அளவில் கடைப்பிடிக்கவில்லை என்பது உண்மைதான். அதற்குக் காரணம், தமிழ் மொழியின் தனித் தன்மையைக் காப்பதிலே அவர்களுக்குஅக்கறையிருக்கவில்லை என்பதன்று. அதற்கான சூழ்நிலை அவர்களுக்கு அப்போது இருக்கவில்லை என்பதுதான். "பகைவன் எதிர்ப்பட்டால், கிடைத்ததை எடுத்து அடி" என ஒரு பழமொழி உண்டு. அதுபோல, இந்திய மக்களின் எதிரியான பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் போர்க்களத்தில் நின்றுகொண்டிருந்த நாளிலே, மொழித்துறையில் வைதிகத்தைக் கடைப்பிடிப்பது தேசியவாதிகளுக்குச் சாத்தியமாக இல்லை. அதனால், தமிழரிடையே வழக்கிலிருந்த மக்களுக்கு நன்கு தெரிந்திருந்த சொற்களையே பயன்படுத்திப் பிரச்சாரம் நடத்தினர். அந்த அளவுக்குச் செல்ல விரும்பாத தூய தமிழ்ப் புலவர்கள் மக்கள் மத்தியிலே செல்வாக்குப்பெற முடியவில்லை. தமிழின் தூய்மையைக் காப்பதிலே கொண்டிருந்த ஆர்வத்தால் பொதுமக்களிடமிருந்து தமிழ்ப் புலவர்கள் ஒதுங்கி வாழ்ந்தனர். விடுதலைப் போரில் தமிழ்ப் பெரும் புலவர்கள் அதிக அளவில் பங்கு கொண்டதாக வரலா

கூறவில்லை. அவர்கள் தேசபக்தி யற்றவர்கள் என்றோ, விடுதலைப் போரில் ஈடுபடுவதற்கான வீரமில்லாதவர்கள் என்றோ யாரும் சொல்வதற்கில்லை. நாளுக்கு நாள் சாதாரணப் பொது மக்களை நோக்கி, மிகவும் வேகமாக நடைபோட்டுக் கொண்டிருந்த தேசியவாதிகளோடு கைகோத்து நடைபோட அவர்களால் முடியவில்லை. அப்படி நடைபோட்டிருந்தால், தூய தமிழ் வைதிகத்தைக் கைவிட்டாக வேண்டிய கட்டாயம் புலவர்களுக்கு ஏற்பட்டிருக்கும். அதனால், தங்கள் வைதிகத்தைக் காத்துக் கொள்வதற்காகவே அவர்கள் விடுதலைப் போருக்கு விலக்காக வாழ்ந்தனர் போலும்.

தமிழ்ப் பெரும் புலவர்களிலே திரு. வி. கலியாணசுந்தரனார் ஒருவர் மட்டுமே இதற்கு விலக்காக வாழ்ந்தார். அவரும், 'தூய தமிழ்'—'தனித் தமிழ்' வைதிகங்களைப் படிப்படியாக விட்டுக்கொண்டு வந்ததனாலேயே தேசியவாதிகளுடன் இணைவது சாத்தியமானது. அக்காலில், போதிய கல்வி அறிவு பெற வாய்ப்பற்றவர்களாக இருந்த தொழிலாளர்களின் தலைவராகவும் திரு. வி. கலியாணசுந்தரனார் விளங்கினாரென்றால்,மொழித் துறையில் அவர் வைதிகத்தைக் கைவிட்டதே அதற்குக் காரணமாகும். இதனை அவரே கூறக் கேட்போம்:

> "சங்கநூற் சொற்களும் சொற்றொடர்களும், பழைய உரையாசிரியர் சொற்களும், சொற்றொடர்களும் என்னிடத்தில் நடம்புரிந்த காலம் உண்டு. அந்நாடகம் யான் நடித்த வேளையில் பெருநூல் எழுதும் வாய்ப்பு எனக்கு நேரவில்லை. துண்டு வெளியீடுகளும், நன்றி அறிக்கைகளுமே பெரிதும் என்னால் எழுதப்பட்டன.
>
> 1917-ம் ஆண்டில் பத்திரிகை உலகை யான் நண்ணியபோது அதற்கென்று ஒரு தனிநடை கொண்டேன். அதுவே எனக்குரிய நடையாய் என்னில் நிலைத்தது."

[திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்; பக். 128.]

> "என்னுடைய வாழ்க்கையில் மூவித நடைகள் மருவின; ஒன்று இளமையில் உற்றது; இன்னொன்று சங்க இலக்கியச் சார்பு பெற்றபோது பொருந்தியது; மற்றொன்று பத்திரிகைப் புலகை அடைந்த நாளில் அமைந்தது. இறுதியதே எனக்கு உரியதாய்—உடையதாய்—நிலைத்தது. இந்நடை எளியது; சிறு சிறு வாக்கியங்களாலாவது."
>
> "செவ்விய தமிழ்நடை, தமிழ் நாட்டிலுள்ள பல்லோர்க்கு இதுபோழ்து பயன்படாதென்று கருதித் "தேசபக்த"னுக்கெனச் சிறப்பாக ஒருவித உரைநடையைக் கொண்டேன்."

[திரு வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள்; பக்.144—145.]

திரு. வி.க. வரைந்துள்ள இந்தக் கருத்தோவியம், அவர் தமது உரைநடையை மாற்றிக்கொண்டு, சாதாரண மக்களை நெருங்கித்தொண்டு புரிந்த நிகழ்ச்சியை நமக்குக் காட்சிப்படுத்துகின்றது. ஆம்; சாதாரணப் பொதுமக்களோடு தொடர்பு கொள்ள விரும்பும் எவரும் தூய தமிழ் வைதிகத்தைக் கடைப்பிடிப்பது சாத்தியமில்லை. தமிழ் வளர்ச்சிக்குக்கூட அது தேவைப்படவில்லை.

'தனித் தமிழ்' உணர்ச்சியை ஒருவகையில் வரவேற்கலாம். தமிழ் வளர்ச்சிக்கு அது தேவைகூட. ஆனால், அந்த உணர்ச்சி பழகு தமிழுக்குப் பகையாகிவிடக் கூடாது.

இன்று நாட்டிலே எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் நாளுக்குநாள் பெருகி வருகின்றனரென்றால், அவர்களிலே பலர் தமிழ் மக்களால் போற்றப்படும் பெருமையினையும் பெற்று வருகின்றனரென்றால், விடுதலைப் போராட்ட காலத்தில் தமிழ் நடையிலேற்பட்ட மகத்தான மாறுதலே காரணம் எனலாம்.

இருபதாம் நூற்றாண்டின் முதற் பத்தாண்டு காலத்திலே தமிழ் உரைநடையின் விறுவிறுப்பையும், வேகத்தையும் கலந்த தேசிய வாதிகளிலே மகாகவி பாரதியாரே முதலிடம் பெறுகிறார். 1907ஆம் ஆண்டில், லோகமான்ய பாலகங்காதர திலகர் ஆறு ஆண்டு சிறைத்தண்டனை பெற்றபோது தமது "விஜயா" நாளிதழிலே பாரதியார் எழுதிய தலையங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:

> "திலகரை ஸர்க்கார் அதிகாரிகள் சிறையிலிட்டுவிட்டனர்....பாரத நாடு முழுமையும்—ஒரு சில விலத்துகள் ஒழிய—திலகர் சிறையுண்டவுடன் ஆற்றொணாத் துக்க மடைந்தது. இங்கிலாந்தில் பார்லிமெண்ட் மெம்பர்களிலே பலர் திலகரைச் சிறையிட்டது பெரிய அநீதி யென்கிறார்கள். ஐரோப்பாவிலே நீதி அபிமானம் கொண்ட பத்திரிகைகளெல்லாம் திலகர் தண்டனை படைத்ததுபற்றி வருத்தம் பாராட்டுகின்றன. உலகத்தில் எந்தப் பிரதேசத்திலும், இவ்விஷயத்தைப் பற்றிக் கேள்வியுற்ற நிஷ்பக்ஷபாதமான ஜனங்கள் யாவரே யாயினும் அவர்கள் எல்லோரும் திலகருக்கு விதித்த தண்டனை வெறும் அநீதி என்கிறார்கள். இவர்கள் எல்லோரும் திலகர் கூட்டந்தான். சூரியனை அவித்தாலும் அவிக்கலாம்' மேருமலையை வெட்டி எறிந்தாலும் எறிந்துவிடலாம். திலகர் கூட்டத்தை ஹதம் செய்ய முடியாது.
>
> ஏனெனில். திலகர் பக்ஷத்திலே நியாயமிருக்கிறது. தர்மமிருக்கின்றது.ஈசனிருக்கிறார். திலகர் என்ன சொல்லுகிறார்? 'பாரத ஜனங்களுக்குப் பட்டினி நீங்கி உணவும், அறிவின்மைபோய் அறிவும், பலமும், வீரியமும், செல்வமும், செழிப்பும், ஸ்வதந்திரமும் கிடைக்கவேண்டும். இதற்கு பாரத ஜனங்களே முயற்சி செய்ய வேண்டும். பிறர் துணையை எதிர்பார்க்கலாகாது'என்கிறார். இதன் பொருட்டு, ஆங்கிலேயர்களை அடித்து, இமிசித்துத் துரத்தவேண்டுமென்கிறாரா? இல்லை. ராஜாங்கத்தாரின் சட்டத்துக்கு விரோதம் செய்ய வேண்டுமென்கிறாரா?—இல்லை.........சமாதானமாகவும் சட்டத்திற்குவுட்பட்டும் இப்போதுள்ள ஆட்சி முறையை எதிர்த்துச் செம்மைப்படுத்த வேண்டுமென்று சொல்லுகிறார். இவருடைய வழக்கை ஒருவரால் அடக்க முடியுமா? இவருடைய கூட்டத்தை ஹதம் செய்ய வல்லவர்கள் யார்?"

['சித்திர பாரதி'; பக்கம்—9.]

பாரதியாரின் உரை நடைப் பகுதியிலே வட சொற்கள் கலந்திருக்கின்றன. ஆனால், மணிப் பிரவாளமன்று. பிற மொழிச் சொற்கள் கலவாமல் அவர் எழுதியுள்ள உரைநடைப் பகுதிகளும் அவருடைய நூல்களில் காணக்கிடக்கின்றன. எழுத எடுத்துக்கொண்ட பொருள், தமது எழுத்து போய்ச்சேரக்கூடிய இடம் ஆகியவற்றை நினைவில் கொண்டு அவர் தம்முடைய நடையை அமைத்துக் கொண்டிருக்கிறார்.

பாரதியார், வ.வே.சு. ஐயர் ஆகியோருடைய உரைநடைகளிலே வட சொற்கள் மிகுதியாகக் கலந்திருப்பதற்கு அவர்களுக்கு வடமொழியிலிருந்த புலமையும் ஒரு காரணம் எனலாம்.

இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டு காலத்தில் தமிழகத்திலே ஈடு இணையற்ற தலைவராக விளங்கினார் வ. உ. சிதம்பரனார். அவருடைய உரைநடைப் பகுதியையும் பார்ப்போம்:

> "நாம் அடைய விரும்பும் நமது உரிமைகளில் எதையேனும் அரசாங்கத்தார் நமக்குத் தருவதாயிருந்தால், அதற்காக நாம் அவர்க்கு வந்தனம் கூறி, அவரோடு உடன்பட்டு உழைத்தலும், எதையேனும் அவர் நமக்குத் தர மறுப்பின் அது விஷயத்தில் நாம் அவரோடு உடன்படாது மாறுபட்டிருத்தலும் வேண்டுமென்றே நாம் (திலகர் குழுவினர்) விரும்புகிறோம். இச்செயல் தமக்குரியவற்றைத் தந்தபோது உவந்தும், தராதபோது வெகுண்டும் நிற்கும் காளையர் செயல்போன்றது. சுருங்கக் கூறின், ஒத்துழைத்தலும், ஒத்துழையாமையும் ஏககாலத்தில் நிகழ வேண்டுமென்பதே நமது அவா."

['எனது அரசியல் பெருஞ்சொல்' என்னும் நூலிலிருந்து]

திரு. வி. கலியாணசுந்தரனாரும் வ. உ. சிதம்பரனாரும், தூய தமிழ் விரும்பும் புலவர்களுக்கும் பழகு தமிழிலேயே கட்டுப்பட்டுக் கிடந்த தேசியவாதிகளுக்கும் இடையிலே—அவ்விரு தரப்பாரையும் பிணைக்கும் பாலம் போல—இருந்து வந்தனர்.

தமிழ் வளர்த்த தேசியத் தலைவர்களில் ஒருவரான தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் உரை நடையிலும் ஒரு பகுதியைப் பார்ப்போம்:

> "ஆஷாடபூதி வேஷமிட்டுக் காஷாயத்தைத் தரித்துத் திரியும் கள்ளர்களை ஆதரிப்பதைக் காட்டிலும் நாம் நமது கண்களால் பார்க்கின்ற ஆயிரக்கணக்கான நாராயணர்களை (ஏழைகளை)ப் பூஜிப்பதுதான் உத்தமமான கைங்கர்யம்."
>
> "பணக் கொழுப்பினாலும் அதிகார வர்க்கத்தினாலும் ஸ்தூல பலத்தினாலும் தாங்கள் இட்டதே சட்டமென நினைத்துப் பொதுஜனங்களுடைய அபிமானத்தையும் அபிப்பிராயத்தையும் சிறிதும் லட்சியம் செய்யாமல் நாய் மனம் சென்றபடியெல்லாம் நடப்பவர்கள் எவர்களோ, அவர்கள் தேவர்களாயினும் சரியே, திருமூர்த்திகளாயினும் சரியே, அவர்களுடைய ஆங்காரத் தலைகளை அப்படியே நசுக்கிவிட வேண்டுமென்பதே எனது ஜீவித காலத்தின் இலட்சியம்.
>
> "தமிழ் நாட்டார் என்னைக் கைவிட்டனர்; தனவந்தர் என்னைக் கைவிட்டனர்; ஆங்கிலங் கற்றோர் என்னைக் கைவிட்டனர்; அரசாங்கத்தார் என்னிடத்தில் எப்படி இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். தென்

> னாட்டை விட்டே போய்விடலாமா என்றுகூட சிலசமயம் எனக்குத் தோன்றுகிறது. என் வியாதியோ பெரிது. ஈஸ்வரன் என்னை எப்படி எல்லாம் ஆட்டிவைக்க நினைத்திருக்கிறானோ தெரியவில்லை. எண்ணற்ற ஏழைகள் தினந்தோறும் மரித்துக் கொண்டேயிருக்கின்றனர். இல்லாமை என்னும் இராக்ஷஸப் பேயானது இவர்களைத் துரத்தித் துரத்திப் பிடுங்குகின்றது. ஏ! பணங்காக்கும் பூதங்களே! உங்களுக்கு அனந்த கோடி நமஸ்காரம். என்னுடைய சகோதரர்கள் இல்லாமையினால் இரக்கின்றார்கள். சிறிது தயவு செய்யுங்கள். உங்களுடைய கல்லான ஹிருதயம் இளகட்டும், உங்களுடைய இரும்பு நெஞ்சம் இளகட்டும்!"

இது, தியாகி சுப்பிரமணிய சிவா, பாப்பாரப்பட்டியில் வாழ்ந்தே தமது நண்பர் சின்ன முத்து முதலியார் என்பவருக்கு எழுதிய கடிதத்தின் ஒரு பகுதியாகும். இதிலே, வடமொழிச் சொற்கள் தேவைக்கதிகமாகவே வந்திருப்பினும், நடையிலே உயிர்த் துடிப்பு இருக்கிறது. ஒவ்வொரு சொல்லிலேயும் சிவாவின் இதயத் துடிப்பு பிரதிபலிக்கிறது. இதே நடையில் பேசியதாலும் எழுதியதாலும்தான் சாதாரண மக்களை வேறு எந்த தேசியத் தலைவரை விடவும் அதிக அளவில் நெருங்கி அவர்களுடைய நெஞ்சங்களில் எல்லாம் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியை வளர்க்க அவரால் முடிந்தது.

விடுதலைப் பாசறையிலிருந்து வெளிப்பட்ட ஒரு பிரசுரத்தின தமிழ் உரைநடையையும் பார்ப்போம்:

> "காலையில் கண் விழித்தேன். கண்முன் நின்ற கோபுரக் காட்சியை என்னென்பேன். பார்த்தாய் தாயே! என்ன இக்கோலம்! கையில் விலங்கென்ன? தலைவிரித்திருப்பதென்ன? மேலெல்லாம் இரத்தம் ஆறாக ஓடுவதென்ன? கண்ணிலும் ரத்தக் கண்ணீர் ஒழுகுவதென்ன? அம்மா! உடம்பெல்லாம் காயமென்ன? விக்கமென்ன? ஐயோ! என்ன கோலமிது! யாருனக்கு இத்துன்பம் இழைத்தது! சொல்லுடனே! பேசாதிருப்பதென்ன? என் இரத்தம் கொதிக்கிறது, நாக்கு உளறுகிறதே..........."

இது, 1932 மார்ச் 6ஆம் நாளிலே—சட்டமறுப்புப் போராட்டகாலத்திலே மதுரை நகர 22ஆவது சர்வாதிகாரி பத்மாஸனி அம்மாள் பெயரால் வெளியான பிரசுரத்தின் முதற் பகுதியாகும். தேசிய வீரனொருவன், அமுத கண்ணீருடன், அலங்கோலமான தோற்றத்தில் பாரத அன்னையைக் கண்டு, அவளுடைய அவல நிலைக்குக் காரணங் கேட்பது போல் அமைந்துள்ளது வாசகம். விடுதலை வீரனுக்குப் பாரததேவி சொல்லும் பதில் வருமாறு:

> "பதறாதே, மைந்த வருந்தாதே! உன் சகோதரர்கள், என் மைந்தரில் சிலரே, இந்த இரத்தக் காயங்களை உண்டாக்கினார்கள். என்னைச் சிறைவைத்திருக்கும் அசுரனின் ஏவுதலின்பேரில் செய்தவை பாதி, அசுரனின் தயவு சம்பாதிக்க வேண்டுமென்று தன் இஷ்டப்படி செய்தது பாதி—மைந்த! என்மேல் ஓடும் இரத்தத்தைக் காட்டிலும், என் உள்ளத்தில் பாயும் இரத்தத்தை உள்ளபடி அறிந்தவர் சிலரே. அன்பார்ந்த என் மக்களில் சிலர் என்னை அசுரனிடமிருந்து விடுவிப்பதற்காகப் படும் அரும்பாடுகளை அறிவேன். என் மைந்தரை அடித்த அடி ஒவ்வொன்றும் என்மேல் விழுந்துள்ளது. காயமும் அவ்வாறே. அவைகள்தான் இக் காயங்கள்."
>
> "ஐயோ! என், அருமை மக்களே, உங்களை நினைக்க நினைக்க துக்கம் ஒருபக்கம் என்மனம் அடைகிறது. மகிழ்ச்சி ஒருபக்கம் அடைகிறது. உங்களைப் பெற்ற பயன் ஒருவாறு பெற்றேன்.

['பத்மாஸனி அம்மாள் வாழ்க்கை வரலாறு' என்னும் நூலிலிருந்து]

இதுபோன்ற உயிர்த் துடிப்புள்ள உரைநடையைப் பயன்படுத்தியதால், அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் கிடந்த ஏழை எளியவர்களுக்கு எல்லாம் எழுச்சியூட்ட முடிந்தது. 'மொழி' என்பது கருவியாவதன்றி, கர்த்தா ஆவதில்லை. இதனை நினைவில் கொண்டால் விடுதலைப்போராட்ட காலத்திலே தமிழ் மொழி அடைந்த மறுமலர்ச்சியில் தமிழ் இனமே விழிப்பு பெற்றதெனலாம். 'தூய தமிழ்' உணர்வு வெறுக்கத்தக்கதன்று. அதுவும் ஒரு காலத்தில் சாத்தியமாகக்கூடியதே. ஆம்; மக்கள் எல்லோரும் போதிய கல்வி அறிவு பெறுங்கால்.

(தொடரும்)

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ம. பொ. சி.யின் மௌனம் சில நல்லவர்களுக்கும் சந்தேகத்தை உண்டு பண்ணியது. அப்போதுதான் காலம் தாழ்த்தாமல 'செங்கோல்' இதழில் "எனது நிலைமை" என்ற தலைப்பில் உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துக் கூறினார்.

பதவிக்காக ம. பொ. சி. ஆசைப்பட்டிருந்தால் அதனைப் பெற அவர் தி. மு. க. ஆட்சிபீடம் ஏறுவதற்கு முன்பு காங்கிரஸ் ஆட்சியிலேயே பெற்றிருக்கலாம். தேடி வந்த பதவிகளையெல்லாம் காங்கிரஸ் ஆட்சியிலே துச்சமென எண்ணிய அந்தத் தூயவர் என்றுமே பதவியை விரும்பாதவர். "பாடு படு; பலனைத் துறந்துவிடு" என்ற காந்தியடிகளின் கொள்கைவழி அன்றுமுதல் இன்றுவரை நெஞ்சு நிமிர்த்தி நடைபோட்டு வருபவர்.

எனக்குத் தெரிந்து, என்னுடைய அனுபவத்தில், என்னுடைய அறிவுக்குத் தெரிந்த மட்டில் கொண்ட கொள்கையைச் சிறிதும் விடாமல் அந்தக் கொள்கைக்காகவே உறுதியோடு போராடி, 'எடுத்த காரியம் யாவினும் வெற்றி' என்று எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் செயல் முடிக்கும் ஒரு வீரனை—தலைவனை நான் கண்டேன,என்றால், அந்த வீரன்—அந்தத் தலைவன் செந்தமிழ்நாடு பெற்ற சிவஞானம் தான் என்று துணிந்து கூறுவேன்.

அரசியலில் தடம் பிறளாத, தரம் குறையாத, அறம் வழுவாத மிகச் சிலரிலே சிவஞானச் செல்வரை தமிழகம் பெற்றுப் பெருமைகொண்டிருக்கிறது.

அவர் தோற்றுவித்து, கட்டிக் காத்து வளர்த்து வரும் தமிழரசுக் கழகம் ஒரு குறிப்பிட்ட கட்சியின் கொள்கைகளைக் கொண்டதல்ல. அன்றுமுதல் இன்றுவரை மூன்று கோடித் தமிழர்களின் மொத்த நலனுக்காகவே பணியாற்றி வ கிறது; இனியும் அப்பணியை அக்கழகம் தொடர்ந்து ஆற்றிவரு

இதனை நன்கு உணர்ந்த தமிழ் பெரியார் திரு. வி. க. அவர்கள் அன்றே தெளிவாகக் குறிப்பிட்டார்கள்; "சிவம் என்றால் அன் ஞானம் என்றால் அறிவு; இன் நாட்டுக்குத் தேவை அன்பும், அ வும். அவைகள் சிவஞானத்தி உருவமாக விளங்குகின்றன. அ ரது தமிழரசுக் கழகம் நாட்டுக்கு தேவை" என்று நல்லாசி வழ கினார்கள்.

இப்படிப்பட்ட ஒழுக்க சீலரா ம. பொ. சி. தமிழ் மக்களின் னுக்கென தமிழரசுக் கழகத்தை துவக்கி, அதன் வாயிலாகத் த கத்திற்கு ஆற்றிவரும் தொண் தமிழ் மக்கள் காலமெல்லா நினைந்து நன்றி பாராட்டி, கழ த்தையும், அதன் தலைவரை போற்றக் கடமைப்பட்டவர்கள்.

இந்த செயற்கரிய சேவை தலைவரும், கழகமும் எத்தனை சோதனைகளை அனுபவித்து அ சோதனைகளை அடுத்து வேத வெற்றிகள் பலவற்றைச் சா திருக்கின்றனர்.

அந்தச் சோதனையில் சாத களுக்கு அடிப்படையாக வை எங்கும், எதிலும், எல்லாம் மாக ஏற்றவை புரிந்து, அடு இலக்காக இருக்கும் "மா சுயாட்சிக் கோரிக்கை"யி வெற்றிபெற்று, அப்பப் பெ போகும் வெற்றியை தமிழ்மக்க சார்பில் தமிழ் அன்னைக் காணிக்கையாகத் தருவதற் தமிழரசுக் கழகம் தன்னைத் த செய்து வருகிறது.

அந்த வெற்றிக்கு வழி வ தமிழரசுக் கழகத்திற்கும், அ தலைவருக்கும் தமிழகம் கட்சி பாடின்றி, எப்போதும் போல ஒத்துழைப்பும் தந்துதவும் எ உறுதியோடு இதனை முடிக்கிறே

புறப்பாடு ...!

(யே. அரங்கநாதன்

இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகமாம்—என
இசையுடன் இசைவுடன் கூறுகின்றீர்!
பயில்மொழி நம்மொழி ஆக்கிவிட்டால்—அதைப்
பயின்றிடத் தயங்கிநீர் நிற்பதுமேன்?

மற்றவர் விண்ணினில் ஏறுகின்றார்—என்றவர்
மாபெருஞ் சாதனை கூறுகின்றீர்!
தெற்றென விளங்கிடும் தாய்மொழியில்—அவர்
தெளிவுடன் கற்பதால் ஏறுகின்றார்!

பெற்றவள் கலங்கிடும் காட்சிதனை—நீ
பெருமையாய் நினைக்கிறாய் என்றுசொன்னால்
வெற்றுடல்! பிணவுடல்! ஐயமிலை—அதை
வேறொரு இடத்தினில் இடல்வேண்டும்!

வந்தவள் வளமுடன் வாழ்ந்திடலாம்!—நல்ல
வழிதனைச் செய்துநாம் தந்திடலாம்!
நந்தனை யீன்றவள் தாழ்ந்திடவே—நாம்
நன்றிலாச் செயலினைத் தரலாமோ?

இதுவரைத் தமிழினில் கற்றதிலை—என்ற
இகழினைப் புகழெனக் கூறுகின்றீர்!
மதுதனைக் குடித்தவன் வாயினிலே—நாம்
மணமிகு தென்றலை நுகருவதோ?

இன்றுநீ புறப்படு தமிழனென்றால்!—வழியில்
இன்புடன் அயல்மொழி கற்பவரை
நன்றுநீ திருத்திடல் உன்கடமை!—அவர்
நல்லவர் ஆகுதல் உன்பெருமை!

"இதோ, பக்கத்தில்தான்; முந்நூறு மைல்!"

(ம. ரா. போ. குருசாமி)

சிலப்பதிகாரத்தில் சுவையான ஒரு காட்சி:

புகார்நகரத்தைவிடுத்துபொழுது புலர்வதன் முன் கண்ணகியையும் உடன் அழைத்துக்கொண்டு புறப்பட்டுவிடுகிறான், கோவலன். கண்ணகி இதுவரை வீட்டை விட்டு வெளியே வந்ததே இல்லை. வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்! புகார் நகரத்தின் எல்லையைத் தாண்டியவுடனேயே கோவலனைப் பார்த்து, "மதுரை மூதூர் யாது?" என்று அவள் கேட்டாளாம்.'மதுரை மூதூர் எங்கே,' 'எது மதுரை' என்று கேட்டாள். "மதுரை எவ்வளவு தூரம்" என்று கேட்கவில்லை. தனக்கு முன் தெரிகிற இடங்களில் ஏதோ ஒன்றுதான் மதுரை என்பது அவள் நினைப்போ! அவளது ஏழைமையை உணர்ந்த கோவலன், விடை சொல்கிறான். "பக்கம்தான்; நெடுந்தூரம் இல்லை. ஆறைந்து காதம் போனால் போதும்"—இது அவன் விடை. ['ஆறைங்காதம் அணித்து' என்பது சிலப்பதிகாரத் தொடர்.] இந்த விடைக்குப் புலவர்கள் நெடுங்காலமாக ஒரு நயம் சொல்லி வருகிறார்கள். "முப்பது காதம் என்றோ, முந்நூறு மைல் என்றோசொன்னால்மெல்லியளாகிய கண்ணகி திடுக்கிட்டு நடுங்குவாள்!" என்று எண்ணி, "பக்கம்தான்; ஆறைந்து காதம்தான்" என்று சொன்னானும் கோவலன். 'ஆறு, ஐந்து, காதம்' என்று சொன்னால் 'முந்நூறு மைல்' என்று எண்ணி நடுங்க மாட்டாளாம்!' இப்படி ஒரு நயம்!

பதினான்கு ஆண்டு வனவாசம் என்று சொன்னால் மிகவும் கொடுமை என்று தோன்றுமென்று, "ஏழிரண்டு ஆண்டின் வா" என்று கைகேயி சொன்னாளாம். இதுவும் புலவர்கள் சொல்லும் நயம்தான். அதுவும் 'காட்டில் இரு' என்று கூடச் சொல்லவில்லை; 'ஏழிரண்டு ஆண்டில் வா' என்றுதான் சொல்லியிருக்கிறாள்! உண்மையில் கைகேயின் கருணையைப் பாராட்ட வேண்டியதுதான்.

நம்முடைய கல்வி அமைச்சர் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றவர். தமிழ்ப் புலவர் என்பதிலே ஐயம் இருக்க முடியாது. 'ஆறைங் காதம், அணித்து' என்று கோவலன் சொன்னதையும், 'ஏழிரண்டு ஆண்டின் வா' என்று கைகேயி சொன்னதையும் படித்திருப்பார். அந்த இலக்கிய நயம் அவருடைய பேச்சிலேயும் இருக்கிறது.

அண்மையில் அவர் பேசியதை நாளிதழ்களில் படித்த போது எனக்கு இந்த இலக்கிய நயம் தான் நினைவுக்கு வந்தது. என்ன இருந்தாலும் இலக்கிய நயத்திலே ஒரு 'நாகரிகம் இருக்கத்தான் செய்கிறது!

தமிழிலே விஞ்ஞானம், தொழில்போன்ற பாடங்களைச் சொல்லிக் கொடுக்கவே முடியாது. தமிழுக்கு ஆற்றல் அந்த வகையிலே இல்லை. மார்கழி மாதத்தில் பாவை விழாக் கொண்டாடவும், பட்டி மண்டபங்களிலே கற்பிலே சிறந்தவள் கண்ணகியா, சீதையா என்று போராடவும்தான் தமிழ் பயன்படும்; அவ்வளவு ஆற்றல் தமிழுக்கு இருப்பதே நம் அருந்தவம்—இப்படிப் பேசிக்கொண்டிருந்தார்கள் நம் தமிழ் நாட்டுத் துரைமார்கள்.

புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள்
கூறும்
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில்
இல்லை
சொல்லவும் கூடுவ தில்லை—
அவை
சொல்லும் திறமை தமிழ்
மொழிக் கில்லை
மெல்லத் தமிழினிச் சாகும்
—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை
ஓங்கும்

என்று நம் நாட்டு ஆங்கிலோ—டமிலர்களின் மனப்பான்மையைப் பதிவு செய்து வை(த்)தார் பாரதியார். இன்றுங்கூட இந்தக் கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிற 'மேதைகள்' இந்த மண்ணிலே இல்லாமலில்லை; பொறுப்பான இடங்களில் சந்நிதி மறைக்கும் நந்தியம் பெருமான்களாக இருந்து, முட்டுக்கட்டை இடும்பணியைச் செய்துதான் வருகிறார்கள்.

இந்த அறிவுலக நந்திகளைப் போல நாவலர் பேசவில்லை. தமிழின் ஆற்றலிலே அவருக்கு நம்பிக்கை இருக்கிறது. தமிழுக்கு ஆற்றல் உண்டு, தகுதி உண்டு; அறிவியலையும் தொழிலியலையும் கற்பிக்கும் பயிற்சி மொழியாக அமைகின்ற தகுதி தமிழுக்கு உண்டு என்று தெளிவுபடுத்தியுள்ளார். கல்விப் பொறுப்பில் உள்ள அமைச்சர் இந்த உறுதியைத் தெரிவித்திருப்பது கல்வித் துறையாளர்களுக்கு மகிழ்ச்சி தருவதுதான். கல்வித்துறை நந்திகளுக்கு எப்படியோ? கல்விக் கோட்பாடுகளை ஆக்க நெறியிலே ஆய்ந்தறிந்து பரப்பும் ஆர்வமுடையவர்களுக்குத் தமிழின் தகுதி உறுதி செய்யப்பட்டுள்ள செய்தி மகிழ்ச்சியைத்தான் தரும்.

ஆனால்!

ஆனால்?

நற்றமிழ் வல்ல நாவலர் தமிழின் ஆற்றலுக்குச் சோதிடம் கணித்து நல்லகாலம் பிறக்கும் எல்லைபற்றி நிமித்திகமும் கூறியிருக்கிறார்.

> "இப்போது இல்லை யென்றாலும் இன்னும் 50 அல்லது 60 ஆண்டுகளில் விஞ்ஞானத் தொழில் நுட்பப் பாடங்களைத் தமிழில் போதிக்க முடியும். அதற்கு வேண்டிய தகுதிகள் தமிழுக்கு உள்ளன."

['தினமணி', 28-11-68]

'காட்டிலேயே இரு' என்று சொல்லாமல்; 'பதினான்கு ஆண்டில் வா' என்று கைகேயி சொன்னாள்; தமிழ் இப்படியே இரண்டாம் மொழியாக—இரண்டாம் தர மொழியாக இருந்துவிடாது; கல்வித் துறையிலே அதற்கு உரிய இடத்தைப் பெற்றே தீரும்; அதற்கு வேண்டிய தகுதி இருக்கிறது என்று சொன்னதே, என்னைப் பொறுத்தவரையில், போதுமான மன நிறைவைத் தருகிறது என்று சொல்லிக் கொள்ளலாம்.

இன்னும் இரண்டு தலைமுறை கழித்தாவது தமிழிலே இந்நாட்டு மக்கள் முழு அளவில் விஞ்ஞானத்தையும் தொழில் நுட்பக் கலையையும் படிப்பார்களே என்ற நினைப்பிலேயே எனக்கு மிகுந்த மன நிறைவு கொள்ளலாம். ஆனால், அந்தப் பொற்காலத்தை நான் இருந்து பார்க்க முடியாது...... அதற்கென்ன பண்ணலாம்? எல்லாம் நாளைக்கே நிறைவேறித் தீர வேண்டுமென்றால் முடியுமா?

"உயர் நிலைப் பள்ளியிலே தமிழ் பயிற்சி மொழியாகி ஒரு தலைமுறைக்குமேல் சில ஆண்டுகள் நாமே கடந்திருக்கின்றோம்! உடனே—தொடர்ந்து—கல்லூரிகளிலும் தமிழுக்கு இடம் கொடுப்பது என்பது அவ்வளவு எளிமையான செயலா! மாறுதல் செய்வதென்றால், மிகவும் விழிப்பாகத்தான் செயல்படவேண்டும். பைப் பையத்தான் பைந்தமிழ் வளரவேண்டும்." இவ்வாறு வாதாடுவதற்கும் இடம் இருக்கிறதுதானே!

தமிழ் நாட்டில் தமிழிலே பாடு—இதற்கு ஓர் இயக்கம்—கிளர்ச்சி தேவைப்படுகிறது. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக இப்படி ஓர் இயக்கம் இருந்தும் தமிழிசைச் சங்கம் தவிர வேறு இடங்களில் தமிழ்ப் பாட்டுத் துக்கடாவாகவே இருந்து வருகிறது

தமிழினம் வாழும் பகுதியை—தமிழ் வழங்கும் பகுதியைத் 'தமிழ் நாடு' என்ற உரிமைப் பெயரால் குறிப்பிடு—இதை வற்புறுத்துவதற்கு மாநாடுகள், கிளர்ச்சிகள், மறியல்கள்...... இவ்வளவுக்குப் பிறகுதான் எப்படியோ 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்துவிட இசைவு பிறக்கிறது!

இவ்வளவு எழுச்சிமிக்க இந்த நாட்டிலே கல்லூரிகளில்மட்டும் நாளைக்கே தமிழைப் பயிற்சி மொழியாக்கி விட வேண்டுமென்றால்,அது எப்படிப் பொருந்தும்! நம்முடைய 'மரபுக்கே முரணான செயலில் எப்படிச் சுறு சுறுப்பாக ஈடுபட முடியும்!

(தொடரும்)

பெரிய மனிதர்கள் ..

"எல்லாத் துறைகளிலும் பெரிய மனிதர்களுக்கு எப்பொழுதுமே மதிப்புண்டு. ஆனால், ஜனநாயகங்களுக்கு இவர்களால் விசேஷ ஆபத்துண்டு. மேதாவிகளால் அல்லது பெரிய மனிதர்களால் நடத்தப்படும் ஒரு சர்க்காரைவிட நடுத்தர மனிதர்களால் நடத்தப்படும் சர்க்காரால் ஜனங்களுக்கு க்ஷேமம் அதிகமுண்டு. அந்த சர்க்கார் அதிக உறுதியுள்ளதாகவும் இருக்கும்.

['காங்கிரஸ் மகாசபை முன்னாள் தலைவர் மயிலை எஸ். சீனிவாச ஐயங்கார்—'ஜனநாயகப் பிரச்னைகள்' என்னும் தமது நூலில், கூறுகிறார்.]

பிறப்பு

தமிழரசுக்கழக மாநில செயலாளர் திரு.ம.சி. கிருஷ்ணமூர்த்தி பி ஏ. அவர்களின் துணைவியார் 23-11-68 அன்று சனி மாலை 4. மணிக்கு சென்னை மருத்துவமனை ஒன்றில் பெண் மகவைப் பெற்றார். தாயும் சேயும் நலம். தலைவர் ம. பொ. சி. மறு நாள் மருத்துவமனை சென்று குழந்தையையும் தாயையும் பார்த்து வந்தார்.

உதகமண்டலம்: "தமிழ்நாடு மகிழ்ச்சி விழா" 1-12-68 சனிக்கிழமை பிற்பகல் உதகை நகர தி மு. க. சார்பில் போஸ் திடலில் நடைபெற்றது. திரு. அ. ம. கதிர்காமம் தலைமை வகித்தார். நகர தி. மு. க. சார்பில் செயலாளர் திரு. செயராமன், சவுகத்அலி, வழக்கறிஞர் தேவராசன், மாணிக்கவாசகம் எம். எல். ஏ., க. துரைசாமி எம். எல். ஏ. ஆகியோர் பேசிய பின் தமிழரசுக் கழக சார்பில் நா. திருமலை பேசினார். இறுதியாக அமைச்சர் திருசாதிக் பாட்சா பேசினார்கள்.

திரு. நா. திருமலை பேசும் போது தமிழ்நாடு பெயர் மாற்றத்திற்காக தமிழரசுக்கழகம் ஆற்றிய பணிகளையும், 1961-ல் அது நடத்திய போராட்டம் பற்றியும், நாடு முழுவதும் ஆயிரத்து எழுநூறு பேர் கைது செய்யப்பட்டதைப்பற்றியும் விளக்கமாக குறிப்பிட்டார். மாவட்ட செயலாளர் திரு. கே. ஏ. முருகேசன் நன்றி கூறினார்.

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மல்லவா தி. மு. க. தலைவரைப் பின்பற்றிக் குரலெழுப்புகிறார். தமிழனுக்குத் 'தமிழ் நாடு' ஆனால், கன்னடனுக்குமட்டும் "மைசூர்" ஏன்? என்று கேட்கக் கூடிய நிலைக்குக் காங்கிரஸ் தலைவர் வந்திருக்கிறார். இதிலிருந்து, தி. மு. க. அரசு காட்டி வருவது தவறான வழியல்ல என்பது புலனாகி விட்டது.

தி. மு. கழக ஆட்சியினுடைய சாதனைகளை காங்கிரஸ் மாநிலங்களும் பின்பற்றிவரக் காண்கிறோம். ஆம்; பரிசுச் சீட்டிலிருந்து எல்லா வகையிலுமே, பிற மாநிலங்களுக்கு வழிகாட்டும்பெருமையை தமிழ்நாடு பெற்றிருப்பதைப் பார்க்கிறோம்.

சங்க இலக்கியங்களை "பத்துப் பாட்டு" 'எட்டுத்தொகை' என்ற இரண்டே சொற்களுக்குள் அடக்கி விட்டார்கள் நம்முடைய சான்றோர்கள். அந்த பத்துப்பாட்டு—எட்டுத்தொகை இலக்கியங்களிலே 'தமிழகம்' என்றுதான் இருக்கிறது. அவற்றை விட்டு—சிலப்பதிகாரத்திற்கு வந்தால் 'தமிழ்நாடு'—'தமிழ்த் தேசம்' என்ற பெயர்களைப் பார்க்கிறோம். பாயிரம் பாடிய பனம்பாரனார், 'தமிழ்உலகம்' என்று சொல்லுகிறார். இப்படி 'தமிழ்—அகம்' 'தமிழ்—நாடு' 'தமிழ்—தேசம்', 'தமிழ்—உலகம் என்ற பெயர்களால் நமது மாநிலம் அழைக்கப் பட்டாலும், வேறுபாடுடைய அத்தனைப் பெயர்களிலும், முதலிலிருப்பது 'தமிழ்'தான்! ஆம்; நமது மாநிலத்தின் பெயரிலே வால் மாறினாலும் தலை மாறவில்லை. அகம் என்பதற்கு மாறாக நாடு வரும்; நாடு என்பதற்கு மாறாக தேசம் வரும்; தேசம் என்பதற்கு மாறாக உலகம்வரும். ஆனால், இந்தப்பெயர்களில் ஒவ்வொன்றின் தலைப்பிலேயும் அடைமொழி 'தமிழ்'தான்! அது மாறவே இல்லை.

'மதராஸ்' என்ற பெயர் ஏன் வந்தது? ஆங்கிலேயன் வைத்தான். அவனைக் கூட நான் கண்டிக்க மாட்டேன். அவன் தெலுங்கு நாடு, கன்னட நாடு, மலையாள நாடு, தமிழ்நாடு ஆகிய நான்கு நாடுகளையும் பிணைத்து ஒரு பொது ஆட்சி அமைத்தான். அதனால்,ஒரு பொதுப் பெயரும் அவனுக்குத் தேவைப் பட்டது. மற்றபடி, 'தமிழ் நாடு' என்ற பெயரை அழிக்கவோ, மறைக்கவோ அவன் விரும்பவில்லை. நான்கு மொழி ராஜ்யத்திற்கு ஒரு பொதுப் பெயர் தேவைப்பட்டதனால், 'மெட்ராஸ்' என்று—தலைநகரத்தின் பெயரை வைத்தான்.

அப்படியே ஒரிசா, அஸ்ஸாம், வங்கம், இந்தி ஆகிய பல மொழிப் பிரதேசங்களைப் பிணைத்து கிழக்குக் கடற்கரை ஓரமாக ஒரு ராஜ்யம் வைத்தான். அதற்கும் தலைநகரத்தின் பெயரால் "கல்கத்தா ஸ்டேட்" என்று வைத்தான்.

அப்படியே, மேற்கு கடற்கரை ஓரத்திலே—சிந்து, பஞ்சாபி, குஜராத்தி, மராத்தி ஆகிய மொழிகள் வழங்கும் பிரதேசங்களைச் சேர்த்து ஒரே ராஜ்யமாக்கினான். அதற்கு தலைநகரத்தின் பெயரால் "பம்பாய் ஸ்டேட்" என்றான். பின்னர், கல்கத்தா ராஜ்யத்திலிருந்து ஒரியா மொழி மாகாணத்தைப் பிரித்த பொழுது அதற்கு 'ஒரிஸ்ஸா' என்று பெயர் வைத்தான். நியாயத்திற்குப் பணிந்து—மொழி வழி உணர்ச்சிக்குப் பணிந்து—நிறத்தாலும் அன்னியன், பிறந்த நிலத்தாலும் அன்னியன், பேசும் மொழியாலும் அன்னியன், கடல் கடந்து ஆதிக்கம் செலுத்த வந்த அந்த அன்னியப் பரங்கியன் கூட மொழிக்கு மதிப்புக் கொடுத்தான்.

பஞ்சாபி மொழி மாநிலத்தை தனிமைப் படுத்தியபோது, அதற்கு "பஞ்சாப்" என்றே பெயர் வைத்தான். சிந்துவைப் பிரித்தபோது "சிந்து" என்றே பெயர் வைத்தான். இதையெல்லாம் நியாயத்தை உணர்ந்து, தானாகவே செய்தான். கிளர்ச்சியோ, போராட்டமோ, புரட்சியோ தோன்றும் வரை காத்திராமல் உரிய காலத்தில் தானாகவே செய்தான்.

சுதந்திரத்திற்குப் பின் நடந்ததென்ன? ஆந்திரர்கள் தனி மாநிலம் பெற்ற நாளிலே அதன் பெயர் 'ஆந்திரா' ஆகிவிட்டது. 'கேரளா'வும் அப்படித்தான்!

அன்பர்களே! தமிழர் களாகிய நாம் வெட்கப்படவேண்டிய ஒரு விஷயத்தை மிகுந்த துக்கத்தோடு சொல்லிக்கொள்கிறேன். இந்திய மாநிலங்களிலே ஆங்கிலேயன் செய்யாத—வடபுலமும் செய்ய விரும்பாத—கொடுமையை தமிழ்நாட்டிலே ஒரு தமிழர் நமக்குச் செய்தார். "தமிழ் நாடு" என்ற பெயரை நான் ஏற்க மாட்டேன்" என்றார். அவர் யார் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. நீங்களே அறிவீர்கள். "மல்லாந்து படுத்துத் துப்பினால் மார்மேல்தான் விழும்" என்றொரு பழமொழி உண்டு. நான் குறிப்பிடும் தமிழர், என் இனத்தவர்; என் மொழியவர்; என் நாட்டவர்; என் வீட்டவர். அதனால், வெட்கத்தால் அவர் பெயரைச் சொல்லாமல் விடுகிறேன்.

அந்தத் 'தமிழர்' இழைத்தகொடுமைக்குப் பரிகாரம் தேட நாம் சட்டப் பேரவையில் தீர்மானம் போட்டு அனுப்பினோம். இப்பொழுது நான் மகிழ்ச்சியடைகிறேன். அந்தக் கடைசிக் கட்டத்திலே, சட்ட சபையிலிருந்த காங்கிரஸ் கட்சி ஒத்துழைத்தது. "தமிழ்நாடு வாழ்க" என்று அண்ணாவோடு சேர்ந்து கோஷித்தனர் காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள். அத்துடன் இந்தப் பெயர் மாற்றம் பற்றிய சர்ச்சை முடிந்து போய்விட்டது என்று எண்ணினேன். ஆனால், இப்பொழுது திரும்ப எழுப்புகிறார்கள் "பெயர் மாற்றத்தை நாங்கள் அப்பொழுதே ஒப்புக் கொண்டோமே. எப்பொழுது எதிர்த்தோம்?" என்று கேட்கிறார்கள். அதை என்னைப் பார்த்தல்லவா கேட்கவேண்டும். அதற்கு நான் பதில் சொல்லுகிறேன்.

1956 நவம்பர் 1-ல் தமிழ் ராஜ்யம் அமைந்தபொழுதே, அதற்கான மசோதாவில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றிருந்த பெயரை 'தமிழ்நாடு' என்று நீயே மாற்றியிருக்கலாமே! ஏன் மாற்றவில்லை?

1956பிப்ரவரி 20ல்—அப்போது எதிர்க் கட்சிகளாக இருந்த நாங்கள் கடையடைப்பு தமிழகமெங்கணும் நடத்தினோம். அப்போது 3 கோரிக்கைகள் வைத்தோம். அவற்றுள் 'தமிழ்நாடு' ஒன்று. ஜனநாயகத்துக்கு நீமதிப்பு கொடுப்பதானால் அன்று ராஜ்யபுனரமைப்பு மசோதா சட்ட மன்றத்தில் விவாதிக்கப்பட்ட போது அப்போது எதிர்க்கட்சியிலிருந்தவர்கள் தமிழ்நாடு கோரி திருத்தம் கொடுத்தார்களே, அதையேனும் நீ ஏற்றாயா? ஏற்க மறுத்தாயே, ஏதனால்?

1961-லே தமிழரசுக் கழகம் போராட்டம் நடத்தியதே, அப்போதேனும் நீ ஏற்றாயா? கலைஞர் சண்முகம் உள்பட 1700 பேர்களை கைது செய்தாயே, எதற்காக?

1961 ஜனவரி30ல்சட்டசபைக்கு வெளியே நாங்கள் (த.அ.க.வினர்) போராடிக் கொண்டிருந்த பொழுது தி. மு. க. எங்களுக்கு ஆதரவாக சட்டப்பேரவையிலிருந்து வெளியேறியது. அதற்கேனும் மதிப்பு தந்தாயா? தரவில்லையே, காரணமென்ன? மூன்று நாட்கள் எதிர்க்கட்சிகளே இல்லாமல் சட்டசபை நடத்தினையே, அதுவா 'தமிழ்நாடு' பெயருக்கு நீ தந்த ஆதரவு?

அப்படி ஒரு ஜனநாயக அசிங்கத்தை நடத்திக் காட்டும் அளவுக்கும் சென்றாயே, அதுவா நீ தந்த ஆதரவு? இதெல்லாம் போகட்டும்; உன்னை ஒன்று கேட்டுவிட்டு வேறு விஷயத்திற்குப் போகிறேன்; நீ அன்று 'தமிழ்நாடு' பெயர் கோரிக்கையை ஒப்புக்கொண்டது உண்மையானால், ஒரு செய்தியை—இதுவரையிலும் 'முரசொலி'யின் கவனத்துக்கும் வராததை—இங்கு நான் சொல்லுகிறேன். அதற்கு உனது பதில் என்ன என்பதையும் எதிர் பார்க்கிறேன்.

1961 ஜனவரித் திங்களிலே அரசாங்க தலைமைச் செயலகத்திலிருந்து—உள்ளாட்சித் துறையிலிருந்து—ஒரு சுற்றறிக்கை ஊராட்சி மன்றங்களுக்கும் நகராட்சி மன்றங்களுக்கும் அனுப்பப்பட்டது. அந்தச் சுற்றறிக்கை தெரியுமா? அப்பொழுது நகராட்சி மன்றங்களும் ஊராட்சி மன்றங்களும் 'தமிழ் நாடு' என்று பெயர் வைக்கக் கோரும் தீர்மானத்தை நிறைவேற்றி ஆட்சிக்கு அனுப்பிக் கொண்டிருந்தன. காங்கிரஸ்காரர்கள் பெரும்பான்மையாயுள்ள நகர மன்றங்களும் அந்தப் பணியைச் செய்தன. அதைப் பொறுக்காத ஆட்சி, "இனிமேல் 'தமிழ்நாடு' பெயர் கோரி எந்த ஊராட்சி அல்லது நகராட்சி மன்றமேனும் தீர்மானம் போட்டால், அது ஆட்சியை எதிர்ப்பதாகக் கருதப்படும், அந்த மன்றம் கலைக்கப்படும்" என்று சுற்றறிக்கை அனுப்பியது. சுயமரியாதை உள்ளவர்களானால் கேட்கிறேன், இது உண்மையா, இல்லையா? பதில் சொல்! தமிழ் நாடு பெயர் கோரிக்கையில் உனக்கு ஆட்சேபனை இல்லையானால், அன்று அந்தச் சுற்றறிக்கையை விட்டது ஏன்? சட்ட விதியைக்காட்டி, 'மன்றம் கலைக்கப்படும்' என்று பய முறுத்தியது எதற்காக? கொள்கையிலே உனக்கு உடன்பாடு உண்டானால், கோலெடுத்துத் தண்டிக்கப் புறப்படுவானேன்?

தி. மு. கழக ஆட்சி அமையாதிலையானால், பெயர் மாற்றம் அடைந்திருக்க முடியாது. தி. மு. கழக ஆட்சி அமைந்ததென்றால், தோழமைக் கட்சிகளெல்லாம் கூட்டு சேர்ந்ததால்தான்! சேரா திருந்தால், ஆட்சியிலே நாம் மா தலை ஏற்படுத்தியிருக்க முடியாது நம், ன்பர்காமராசரை—மன்னியுங்கள் தலைவர் காமராசரை; நான் ஒன்று வேண்டிக் கொள்கிறேன். அரசியல் விஷயங்களில் நீங்கள் எங்களுடன் எதிலேனும் எங்களோடு சண்டை போடுங்கள். எங்களை வாதத்திற்கு அழையுங்கள்—நீங்கள் அழைக்க மாட்டீர்கள்; அழைக்க அடியாட்களை ஏவி விடுகிறீர்கள்—நாங்கள் கருத்துப் போர் நடத்தத் தயாராயிருக்கிறோம். ஆனால், தமிழ், தமிழ்நாடு, தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் எங்களை வம்புக்கு இழுக்காதீர்கள். இந்த விஷயங்களிலே லேயும், நாம் பிரிந்து நின்று பிளவுபட்டு சண்டையிடுவதை குக்கு முடிவு கட்ட நாங்கள் விரும்புகிறோம். அதற்கு எங்களுக்குக் கைகொடுங்கள். கட்சிக்கும் அப்பாற்பட்டதாகிய தங்களைக் காட்ட நாங்களெல்லாம் தயாராயிருக்கிறோம், காட்டிக் கொண்டு வருகிறோம். அதையே தங்களிடமிருந்தும் எதிர்பார்க்கிறோம்.

செங்கோல்

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா	12-50
ஆறுமாதச் சந்தா	6-25
மூன்று மாதச் சந்தா	3-12
தனிப் பிரதி	0-25



ஆசிரியர், வெளியிடுபவர்: ம. பொ. சிவஞானம் 1/29. இருசப்ப கிராமணிதெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5 தமிழ்நாடு.
அச்சிட்டவர்: நாவல் ஆர்ட் பிரிண்டர்ஸ், ஜானிஜான்கான் தெரு—சென்னை-14.